06.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் பரவலாக மழை

தமிழகத்தில் கத்திரி வெயில் காலம் கடந்த 28-ஆம் தேதியுடன் முடிவடைந்தது. இருப்பினும், மேற்கில் இருந்து வறண்ட காற்று வீசுவதால் வெப்பத்தின் தாக்கம் நீடித்தது.

இந்த நிலையில் வெப்பச்சலனத்தின் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.

கடலூர், சிதம்பரம், சீர்காழி, புவனகிரி உள்ளிட்ட பகுதிகளிலும், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் பலத்த மழை பெய்து வருகிறது.

இதேபோன்று தஞ்சாவூர், மயிலாடுதுறை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும், விழுப்புரம், சென்னை புறநகரான் தாம்பரம் , வண்டலூர், பெருங்களுத்தூர் உள்ளிட்ட உடங்களில் காற்றுடன் கூடிய மழை பரவலாக பெய்து வருகிறது.

கேரள மாநிலத்தில் இன்னும் ஓரிரு நாள்களில் தென்மேற்கு பருவமழைக்கான காலநிலை உருவாகும் சூழல் உள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் வெப்பத்தின் தாக்கம் குறையும். கேரள மாநிலத்தின் எல்லைப் பகுதியில் தமிழக மாவட்டங்களில் மழை பெய்யவும் வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## குஜிலியம்பாறை பகுதிகளில் மழை

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர், குஜிலியம்பாறை, எரியோடு, கோவிலூர், ஆர்.கோம்பை உள்ளிட்ட பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது.

சில பகுதிகளில் 30 நிமிடங்களுக்கும் மேல் மழை பெய்ததால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மானாவாரி மற்றும் ஆடிப்பட்டம் விதைப்புக்கு இந்த மழை உதவியாக இருக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அதே நேரத்தில், குண்டும் குழியுமான சாலைகளில் மழைநீர் தேங்கி நிற்பதை தடுப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். திண்டுக்கல் குஜிலியம்பாறை பிரதான சாலையில், கோவிலூரிலிருந்து ஆர்.கோம்பை செல்லும் பிரிவு சந்திப்பில் நீண்ட நாள்களாக குண்டும் குழியுமாக உள்ளது. இதில், மழைநீர் தேங்குவதால், அந்த வழியாக செல்லும் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் பாதிப்படைகின்றனர்.

எனவே இச்சாலையை சீரமைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வால்பாறையில் தொடர் மழை

வால்பாறையில் இடைவிடாது பெய்த மழையின் காரணமாக இயல்பு வாழ்கை பாதிப்படைந்தது.

வால்பாறை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக பருவ மழை தொடர்ந்து பெய்து வருகிறது. குறிப்பிட்ட காலத்தில் பருவ மழை துவங்கியிருப்பது இப்பகுதி தேயிலை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் முதல் இடைவிடாது மழை பெய்ததால் சந்தையில் காய்கறி வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எஸ்டேட் பகுதியில் இருந்து நகரப் பகுதிக்கு வந்த

தோட்டத் தொழிலாளர்களும், மழையின் காரணமாக உடனடியாக திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

தொடர் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்கை பாதிக்கப்பட்டது. வழக்கமாக ஞாயிற்றுக்கிழமை மாலை பரபரப்பாக காணப்படும் வால்பாறை நகரில் மழையின் காரணமாக சாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

மேலும், ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பெய்த மழை அளவு விவரம்: வால்பாறை 9 மி.மீ., சோலையாறு 9 மி.மீ., சின்னக்கல்லாறு 19 மி.மீ.,லோயர்நீராறு 10 மி.மீ.

**சுரைக்காய் விலை உயர்வு**

தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதியில் சாகுபடி செய்யப்படும் சுரைக்காய் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் சுரைக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இதை சாகுபடி செய்வதற்கு அதிக செலவு ஏற்படுவதில்லை. மேலும், அதிகப்படியான விவசாயத் தொழிலாளர்களும் தேவையில்லை. இதனால், விவசாயிகள் சுரைக்காய் சாகுபடியில் ஆர்வம் காட்டுகின்றனர்.

மாசிப் பட்டத்தில் சாகுபடி செய்த சுரைக்காய் இதுவரை அறுவடை செய்யப்பட்டு வந்தது. தற்போது சீசன் முடிவடைய இருக்கும் நிலையில், சுரைக்காய் விளைச்சல் குறைந்து விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2 மாதங்களுக்கு முன் சராசரியாக ரூ.5-க்கு விற்பனை ஆன ஒரு சுரைக்காய், தற்போது அதிகபட்சமாக ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது. சுரைக்காய் விலை அதிகரித்தபோதிலும் விளைச்சல் குறைந்துள்ளது. ஆனாலும், சுரைக்காய் விலை உயர்வு விவசாயிகளுக்கு மழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ரூ. 36 லட்சத்துக்கு விளைபொருள்கள் ஏலம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 36 லட்சத்து 76 ஆயிரத்துக்கு கொப்பரை, தேங்காய், நிலக்கடலை ஏலம் நடைபெற்றது.

அவல்பூந்துறை சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 1,363 மூட்டைகளில் 68 ஆயிரத்து 290 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 54.25-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 51.75-க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 53.25-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 42.45-க்கும் என மொத்தம் ரூ. 33 லட்சத்து 95 ஆயிரத்துக்கு விற்பனையானது.

அதேபோல, 28 ஆயிரத்து 781 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிக விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 14,669-க்கும், குறைந்த விலையாக டன் ரூ. 11,700-க்கும் என 1 லட்சத்து 59 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

மேலும், 65 மூட்டைகளில் 2 ஆயிரத்து 160 கிலோ எடையுள்ள நிலக்கடலைக்காயை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக கிலோ ரூ. 56.79-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 53.79-க்கும் என மொத்தம் ரூ. 1 லட்சத்து 20 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. மொத்தம் ரூ. 36 லட்சத்து 76 ஆயிரத்துக்கு விளைபொருள்கள் ஏலம் நடைபெற்றது.

## ரூ. 90 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 90 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 4,273 மூட்டைகளில் 2,10,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 54.15-க்கும், அதிகபட்சமாக ரூ. 56-க்கும் என சராசரியாக கிலோ ரூ. 55.10-க்கு விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 39.10-க்கும், அதிகபட்சமாக ரூ. 53.60-க்கும் என சராசரியாக கிலோ ரூ. 49.30-க்கு விற்பனையானது. மொத்தம் ரூ. 90 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

## வேளாண் விளைபொருள்களை வாடகைக்கு இருப்புவைத்து பயன்பெறலாம்

அரசுக்குச் சொந்தமான குளிர்பதனக் கிடங்குகளில் வேளாண் விளைபொருள்களை வாடகைக்கு இருப்பு வைத்து பயன்பெறலாம் என்று ஈரோடு வேளாண் விற்பனைக்குழு செயலாளர் எல்.குழந்தைவேலு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் சனிக்கிழமை விடுத்த செய்தி:

தமிழ்நாடு அரசு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின்கீழ் இயங்கும் ஈரோடு விற்பனைக் குழுவுக்கு உள்பட்ட சத்தியமங்கலம், கொடுமுடி, அந்தியூர், புஞ்சைபுளியம்பட்டி, அவல்பூந்துறை ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகங்களில் 25 மெட்ரிக் டன், சத்தியமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் கோபி வட்டம் அளுக்குளி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

1,000 மெட்ரிக் டன் குளிர்பதனக் கிடங்குடன் கூடிய வணிக வளாகம் கட்டி முடிக்கப்பட்டு வாடகை குத்தகைப் பயன்பாட்டுக்குத் தயார் நிலையில் உள்ளது. குளிர்பதனக் கிடங்கைப் பயன்படுத்த விரும்பும் விவசாயிகள் மற்றும் வணிகர்கள் தங்கள் விளைபொருள்களையும், வர்த்தகப் பொருள்களையும் கீழ்க்காணும் அட்டவணையின்படி குத்தகை வாடகை அடிப்படையில் இருப்பு வைத்து நீண்ட நாள்கள் கெடாமல் பாதுகாப்பாக இருப்பு வைத்துக் கொள்ளலாம். உயர்ந்த விலை கிடைக்கும் காலங்களில் விற்று பயனடையலாம்.

குத்தகை அடிப்படையிலான கட்டண விவரம்: 25 மெட்ரிக் டன் - மாதம் ஒன்றுக்கு ரூ. 4000, 100 மெ.டன் - மாதம் ஒன்றுக்கு ரூ. 10,000, 250 மெ.டன் - மாதம் ஒன்றுக்கு ரூ. 25000.

வாடகை அடிப்படையிலான கட்டண விவரம்: ஆப்பிள் - ரூ. 16 (18 கிலோ - ஒரு மாதம்), பழங்கள் - 60 பைசா (1 கிலோ - ஒரு மாதம்), காய்கறிகள், பூக்கள் - ரூ. 1.50 பைசா (ஒரு கிலோ, 3 நாள்கள்), கேரட் - ரூ. 35 (ஒரு குவிண்டால் - ஒரு மாதம்), மிளகாய், கொத்தமல்லி - ரூ. 500 (ஒரு டன், ஒரு மாதம்), புளி, பயறு வகைகள் - ரூ. 200 (ஒரு டன் - ஒரு மாதம்), உலர் பழங்கள் - ரூ. 750 (ஒரு டன், ஒரு மாதம்), வாழை - ரூ. 150 (ஒரு டன், ஒரு நாள் மட்டும்), மஞ்சள் - ரூ. 400 (ஒரு டன், ஒரு மாதம்), வாசனைப் பொருள்கள், மற்ற பொருள்கள் - ரூ. 500 (ஒரு டன், ஒரு மாதம்).

இந்த வாடகை விவரங்கள் குளிர்பதனக் கிடங்கில் இருப்பு வைத்துள்ள அனைத்து வேளாண் விளைபொருள்களுக்கும் பொருந்தும். குத்தகை அடிப்படையில் குளிர்பதனக் கிடங்கைப் பயன்படுத்த விரும்புவோர் ஆறு மாத கால வாடகையை முன்பணமாக ஈரோடு விற்பனைக் குழுவில் செலுத்தி 11 மாத காலத்துக்கு குத்தகைக்கு எடுத்துக் கொள்ளலாம்

ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்ட குளிர்பதனக் கிடங்குகளுக்கு ஏற்படும் சில்லரை செலவினங்கள் குறிப்பாக மின் கட்டணம், சிறு சிறு பராமரிப்பு பணிகள், பாதுகாப்புக்கான செலவுகள் போன்றவற்றை ஒப்பந்ததாரர்களும், பெரிய அளவிலான பராமரிப்புப் பணிகள் மட்டும் முதன்மைச் செயலாளர், ஆணையர் ஒப்புதலுடன் விற்பனைக் குழுவால் மேற்கொள்ளப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அறிக்கையிடப்பட்ட விளைபொருள்களின் விலை விவரம் அனைத்தும் அக்மார்க் இணையதளத்தில் (www.agmark.nic.in) பார்த்துக் கொள்ளலாம்.

குளிர்பதனக் கிடங்கில் வேளாண் விளைபொருள்கள் இருப்பு வைக்க மட்டுமே பயன்படுத்த வேண்டும். நல்ல விலை கிடைக்கப் பெறும்பட்சம் விளைபொருள்களை விற்பனை செய்து பயன்பெறலாம். இதுகுறித்து, கூடுதல் விவரம் அறிய ஒழுங்குமுறை விற்பனைக்கூட பொறுப்பாளர்கள்

மற்றும் வேளாண்மை அலுவலர்களை (வேளாண் வணிகம்) அணுகலாம் எனத் தெரிவித்துள்ளார்.

### நீலகிரி தேயிலை ஏற்றுமதி அதிகரிப்பு: தேயிலை வாரியம் தகவல்

நீலகிரி தேயிலை ஏற்றுமதி கடந்த ஆண்டைவிட அதிகரித்துள்ளதாக தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் பால்ராசு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் தெரிவித்துள்ளதாவது: தென்னிந்தியாவில் கடந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரை 212.88 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில், தமிழகத்தில் 152.51 மில்லியன் கிலோவும், கேரளத்தில் 54.32 மில்லியன் கிலோவும், கர்நாடகத்தில் 6.05 மில்லியன் கிலோவும் உற்பத்தியாகி உள்ளன.

அதன்படி, கடந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரை ரூ. 1133.85 கோடி மதிப்பிலான தேயிலைத் தூள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன் சராசரி விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 133.21 ஆக இருந்தது. நீலகிரி மாவட்டத்தைப் பொருத்தவரை 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு விவசாயிகளால் 70,266 ஏக்கர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டு மகசூல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், குன்னூரில் உள்ள தேயிலை ஏல மையங்களில் இந்த ஆண்டு மே மாதம் வரையில் கடந்த ஆண்டு விற்பனையில் 60 சதவீத தேயிலை இப்போதே விற்பனையாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. தற்போது 1 கிலோ தேயிலைத் தூளுக்கு சராசரியாக ரூ. 102-க்கு மேல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாரமும் தேயிலைத் தூள் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தென்னிந்தியாவில் உள்ள கோவை, கொச்சின், குன்னூர் ஆகிய தேயிலை ஏல மையங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ள தேயிலைத் தூள்களைக் கணக்கிடும்போது சராசரி விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ. 124 வரை விலை கிடைத்துள்ளது.

தென்னிந்தியாவில் தேயிலைத் தூள் உற்பத்தி குறைவாக இருந்தாலும் உணவு பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்தி வருவதால் ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலைத் தூளின் விலை

உயர்ந்து வருவதாக தெனிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.85 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 2,ஆயிரம் குவிண்டால் மஞ்சள் ரூ.85 லட்சத்துக்கு ஏலம் போனது.

திருச்செங்கோடு - வேலூர் சாலையில் திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது.

சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 2 ஆயிரம் குவிண்டால் மஞ்சள் கொண்டு வரப்பட்டது. ஒரு குவிண்டால் விரலி ரூ. 8 ஆயிரத்து 369 முதல் ரூ.10 ஆயிரத்து 509 வரையும், கிழங்கு ரூ.8 ஆயிரத்து 069 முதல் ரூ.8 ஆயிரத்து 555 வரையும், பனங்காலி ரூ.9 ஆயிரத்து 389 முதல் ரூ.25 ஆயிரத்து 9 வரையும் ஏலம் போனது.

மொத்தம் 2000 குவிண்டால் மஞ்சள் சுமார் ரூ.85 லட்சத்துக்கு ஏலம் போனதாக மேலாண் இயக்குநர் ஹேமா தெரிவித்தார்.

## தஞ்சையில் நாளை நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சி

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகம் அருகேயுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில் செவ்வாய், புதன் (ஜூன் 7,8) கிழமைகளில் காலை 9 மணி முதல் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

பயிற்சிக்கு வரும் அனைவரும் தவறாமல் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டுவர வேண்டும். மேலும் விவரங்களுக்கு 98424 55833, 04362 - 204009 ஆகிய

எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## குறுவை தொகுப்புத் திட்டத்தில் 40,000 ஏக்கரில் இயந்திர நடவு செய்ய இலக்கு

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை தொகுப்புத் திட்டத்தின் கீழ் 40,000 ஏக்கரில் பாய் நாற்றங்கால் தயாரித்து இயந்திர நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூர் அருகே டவுன் கரம்பை, ராராமுத்திரக்கோட்டையில் விவசாயிகளின் வயலில் குறுவை தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படுவதை சனிக்கிழமை ஆய்வு செய்த அவர் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது:

குறுவை சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாகக் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தைத் தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

சென்னையில் வேளாண்மைத் துறை அமைச்சர் தலைமையில் அண்மையில் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் நிகழாண்டில் குறுவை சாகுபடிப் பரப்பை அதிகரிக்கச் செய்ய டெல்டா மாவட்ட விவசாயிகளுக்குப் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன.

மாவட்டத்தில் நிகழ் குறுவைப் பருவத்தில் 80,625 ஏக்கர் பரப்பளவில் நெல் பயிர் நடவு செய்யத் திட்டமிடப்பட்டது. இதில், இதுவரை 24,625 ஏக்கர் பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள பரப்பளவில் 40,000 ஏக்கரில் பாய் நாற்றங்கால் தயாரித்து இயந்திர நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக நூறு சதவீத மானியம் அளிக்கப்படுகிறது. இதில், ஏக்கருக்கு ரூ. 4,000 வீதம் பின்னேற்பு மானியமாக வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

மேலும், குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும். நெல் உற்பத்தி பெருக்கும்

காரணிகளான விலையில்லா நுண்ணூட்டக் கலவை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் 12,000 ஏக்கருக்கும், துத்தநாக சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் 30,000 ஏக்கருக்கும் வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாசன நீரை சிக்கனமாக உபயோகப்படுத்துவதற்காக 250 யூனிட் நீர் கொண்டு செல்லும் விதமாக 6 மீட்டர் நீளமுள்ள 30 குழாய்கள் வழங்கப்படும்.

நிகழாண்டு சிறப்புத் திட்டமாகக் குறுவை சாகுபடி செய்ய இயலாத விவசாயிகளுக்கு பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ. 1,400 மதிப்பில் உழவு மானியமும், 8 கிலோ விதையும் 8,000 ஏக்கருக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர். அப்போது, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் (பொறுப்பு) சி. சீனிவாசன், துணை இயக்குநர் என். இளஞ்செழியன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பி.சொக்கலிங்கம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**நாகை, வேதாரண்யத்தில் மழை**

நாகை, வேதாரண்யம் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இரவு மழை பெய்தது.

அக்னி நட்சத்திரம் முடிந்தபிறகும் நாகை மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் குறையவில்லை. வெயிலுடன் அனல் காற்று வீசுவதால் மக்கள் சிரமமடைந்து வருகின்றனர்.

வேதாரண்யம் பகுதியில் சனிக்கிழமை இரவு பலத்த மழை பெய்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்தது.

மாலை நேரத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சிறிதுநேரத்தில் இடிமின்னலுடன் பலத்த மழை பெய்தது. அதுபோல நாகையிலும் சிறிதுநேரம் பலத்த மழையும் அதைத் தொடர்ந்து தூறலும் பெய்தது. சீதோஷ்ண நிலை மாற்றத்தால் வெப்பம் தணிந்து குளிர்ந்த

காற்று வீசியது. இதனால் நாகை, வேதாரண்யம் பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## அதிகமாக சிக்கும் திருக்கை மீன்கள்; மகிழ்ச்சியில் மீனவர்கள்

மீன்பிடித் தடைக்காலம் முடிந்தபின் கடலுக்குச் சென்ற விசைப்படகுகளில் திருக்கை மீன்கள் அதிக அளவில் சிக்குவதால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மீன் வளத்துக்காக ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு ஆண்டுதோறும் ஏப்ரல் 15 முதல் மே மாத இறுதி வரை தடை செய்யப்படுகிறது. நிகழாண்டு தடைக்காலம் நிறைவடைந்தபின், காரைக்கால் மீனவர்கள் கடந்த மாதம் 29-ஆம் தேதி விசைப்படகுகளில் கடலுக்கு சென்றனர்.

3 நாள்களில் கரை திரும்பிய மீனவர்கள் வலையில் ஏற்றுமதித் தரம் வாய்ந்த மீன்கள் சிக்கின.

இந்நிலையில், காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்துக்கு ஞாயிற்றுக்கிழமை திரும்பிய சுமார் 50-க்கும் மேற்பட்ட படகுகளில் ஏராளமான திருக்கை மீன்கள் இருந்தன. ஏலக்கூடத்தில் சுமார் 20 டன் திருக்கை மீன்கள் விற்பனை செய்யப்பட்டன. ஒவ்வொரு திருக்கை மீனும் 15 கிலோ முதல் 50 கிலோ வரை எடை இருந்தன.

இதுகுறித்து மீனவர்கள் கூறுகையில், திருக்கை மீன்கள் பொதுவாக வளைகுடா பகுதியில்தான் அதிக அளவில் காணப்படும். தற்போது மீனவர்கள் வலையில் குருவி திருக்கை, புள்ளித் திருக்கை, கொம்பு திருக்கை, ஆடா திருக்கை, கருந்திருக்கை ஆகிய சில வகைகள் மட்டும் சிக்குகின்றன. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 15 வகையான திருக்கைகள் பிடிபட்டன. ஆனால் இவை தற்போது கிடைப்பதில்லை.

திருக்கை மீன்கள் மருத்துவக் குணமிக்கதாகும். எனவே, உள்ளூர் வெளியூரில் இந்த மீன்களுக்கு அதிக வரவேற்பு இருக்கிறது. தமிழகம் அல்லாது வெளிமாநிலங்களில் திருக்கையை கருவாடாக்கி உணவாகப் பயன்படுத்துகின்றனர்.

எல்லா நாள்களிலும் திருக்கை மீன்கள் கிடைக்காது. தற்போது அதிக அளவில் திருக்கை மீன்கள் பிடிபட்டுள்ளது மகிழ்ச்சியாக உள்ளது என்றனர்.

## மரங்கள் வளர்ப்பில் கரியாப்பட்டினம் ஊராட்சி தீவிரம்

வேதாரண்யத்தை அடுத்த கரியாப்பட்டினம் ஊராட்சிக்குள்பட்ட அரசுக்குச் சொந்தமான இடங்களில் மரக் கன்றுகள் நட்டு வளர்க்கும் பணியில் ஊராட்சித் தலைவர் வனிதா ராஜராஜன் தீவிரம் காட்டி வருகிறார்.

நீர்நிலை கரைகள், சாலையோரங்கள் என சுமார் 7 கி.மீட்டர் தொலைவுக்கு வேம்பு, பங்கை உள்ளிட்ட பல வகை மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. தொடர் கண்காணிப்பால் சுமார் 3 ஆயிரம் கன்றுகள் குறிப்பிட்ட அளவில் வளர்ந்துள்ளன.

2013-ஆம் ஆண்டு முதல் செய்யப்படும் இந்தப் பணிக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பைத் தருவதாக ஊராட்சித் தலைவர் வனிதா ராஜராஜன் தெரிவித்துள்ளார்.

இந்த மரக்கன்றுகளைப் பாதுகாக்கும் பணியை மாநில வேளாண் திட்டக் குழு உறுப்பினர் கோ.சிவஞானம் செய்து வருகிறார்.

## விற்பனைக் கூடம் மூலம் பருத்தி ஏலம் தொடக்கம்

திருவாரூர் மாவட்ட பருத்தி விவசாயிகளுக்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் பருத்தி ஏலம் தொடங்கப்படவுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்ட பருத்தி விவசாயிகளுக்கு ஜூன் 7 ஆம் தேதி திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி ஏலம் தொடங்கவுள்ளது. இதன் தொடர்ச்சியாக வாரம்தோறும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் குடவாசல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில்

வலங்கைமான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் பருத்தி ஏலம் நடைபெற உள்ளது.

எனவே, விவசாயிகள் தங்கள் பருத்தியை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது. உள்ளூர் மற்றும் வெளியூர்களிலிருந்து வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்கவுள்ளதால், இதனை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## கூடுதலாகப் பெய்த பருவமழையால் மாம்பழம் வரத்து அதிகரிப்பு: செந்தூரம், பங்கனப்பள்ளி ரகங்களுக்கு வரவேற்பு

திருநெல்வேலி மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டில் கூடுதலாகப் பெய்த வடகிழக்கு பருவமழையின் காரணமாக மாம்பழம் வரத்து அதிகரித்துள்ளது. செந்தூரம், பங்கனப்பள்ளி ரகங்களை பொதுமக்கள் மிகவும் விரும்பி வாங்கிச் செல்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

கோடைகாலத்தில் வரும் பழ வகைகளில், தர்பூசணிக்கு அடுத்தபடியாக மாம்பழங்கள் உள்ளன. கோடை மாம்பழங்கள் மிகவும் சுவை மிகுந்ததாகக் காணப்படும். ஆண்டுதோறும் மே இரண்டாவது வாரத்தில் தொடங்கும் கோடை மாம்பழ சீசன், ஆகஸ்ட் மாதம் முடிவு வரை நீடிக்கும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரப் பகுதிகளில் மாமரங்கள் அதிகளவில் உள்ளன. செங்கோட்டை, தென்காசி, கடையம், ஆழ்வார்குறிச்சி, களக்காடு ஆகிய பகுதிகளில் மா உற்பத்தி அதிகம். இம் மாவட்டத்தில் மொத்தம் 6,200 ஹெக்டேர் பரப்பளவில் மா மர தோட்டங்கள் உள்ளன. செந்தூரம், நீலம், பெங்களூரா, பங்கனப்பள்ளி, அல்போன்சா, இமாம்பசந்த் ஆகிய ரகங்கள் பயிரிடப்படுகின்றன. இவற்றில் கோடை சீசனில் முதலில் செந்தூரமும், பங்கனப்பள்ளியும் விற்பனைக்கு வரும். இறுதியாக நீலம் வகை விற்பனைக்கு வரும். தற்போது செந்தூரம், அல்போன்சா ஆகிய ரகங்கள் மிகவும் அதிகளவில் குவிந்துள்ளன. அதன் தரத்துக்கு ஏற்ப கிலோ ரூ.40 முதல் ரூ.60 வரை விற்பனையாகின்றன.

இதுதவிர சேலம், தேனி, பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் மாம்பழங்கள் விற்பனைக்காக வந்துள்ளன. நீலம் ரகம் ரூ.50க்கும், இமாம்பசந்த் ரூ.90க்கும், பஞ்சவர்ணம் ரூ.70க்கும், சப்பட்டை ரூ.60க்கும், பாலாமணி ரூ.60க்கும், பங்கனப்பள்ளி ரூ.70க்கும் விற்பனையாகின்றன. அல்போன்சா, செந்தூரம், இமாம்பசந்த் உள்ளிட்ட ரகங்கள் அதிகளவில் விற்பனையாகின்றன. இதுதவிர கிளிமூக்கு எனப்படும் நாட்டு மாம்பழங்கள் கிலோ ரூ.25 விலையில் கிடைக்கின்றன.

விளைச்சல் அதிகம்: இதுகுறித்து திருநெல்வேலியைச் சேர்ந்த மாம்பழ வியாபாரி ஒருவர் கூறியதாவது: தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை கடந்த ஆண்டில் வழக்கத்தைவிட கூடுதலாகப் பெய்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் மழையின் அளவு மிகவும் அதிகம். அதனால் மாமரங்களில் காய்களின் விளைச்சல் அதிகமாக உள்ளது. குறிப்பாக, தென்காசி சுற்றுவட்டார தோட்டங்களில் இருந்துதான் அதிகளவில் மாம்பழங்கள் விற்பனைக்காக வரும். ஆனால், இந்த ஆண்டில் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மாம்பழங்கள் வந்துள்ளன.

தமிழகத்தில் தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்கள்தான் மாம்பழ உற்பத்தியில் முன்னணியில் உள்ளன. ஆனால், அனைத்து ரக மாமரங்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளன. ஆண்டுதோறும் சராசரியாக 15 ஆயிரம் டன் மாம்பழங்கள் உற்பத்தியாகின்றன. அனைத்துப் பகுதிகளிலும் கோடைக்கு பின்பு மாங்காய்கள் கிடைப்பது இல்லை. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மட்டும் அக்டோபர், நவம்பர் மாதங்களிலும் மாங்காய்கள் கிடைக்கின்றன. இந்தப் பருவத்தில் பழமாக மாற்றாமல் காயாக தமிழகத்தின் அனைத்து சந்தைகளுக்கும் வியாபாரிகள் அனுப்புகிறார்கள். கோடை மாம்பழ சீசனை காட்டிலும் இந்த இடைப்பருவ காய்ப்பின்போது வருவாய் அதிகம் கிடைத்து வருகிறது. இது இந்த இரு மாவட்ட மா விவசாயிகளுக்கு கிடைத்துள்ள தனித்தன்மை என்றார் அவர்.

அதிகாரிகள் எச்சரிக்கை: இதுகுறித்து உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள் கூறியது: மாங்காய்களை பொதுவாக வைக்கோல் உள்ளிட்ட வெப்பம் தருபவற்றில் வைத்தால் எத்திலீன் சுரப்பு மூலம் 2

நாள்களில் நன்றாக பழுத்து சாப்பிட உகந்ததாக மாறும். நேரசிக்கனம் கருதி சில வியாபாரிகள் கார்பைடு கல் மூலம் மாம்பழங்களைப் பழுக்க வைக்கிறார்கள். கார்பைடு கல்லில் உள்ள அசிட்டிலீன் எனப்படும் வாயுவின் காரணமாக ஒரே நாளில் பழுத்த நிலையை அடையும். ஆனால், இது சாப்பிட உகந்தது அல்ல. வெம்பிப் பழுக்கும் நிலையைப் போன்றது. இதனை சாப்பிட்டால் வயிற்றுவலி உள்ளிட்ட உபாதைகள் ஏற்படும்.

கார்பைடு கல்லால் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களில் லேசான வெளிர்மஞ்சள் புள்ளிகளைக் காண முடியும். காம்பு பகுதியில் வெட்டிச் சாப்பிட்டு பார்த்தால் புளிப்புச் சுவையும், அதற்கான மணமும் வீசும். சந்தேகம் ஏற்படும் பழங்களை உடனடியாக சாப்பிடாமல் குளிர்சாதன பெட்டிகளில் ஒரு நாள் வைத்து அதன் பின்பு சாப்பிட வேண்டும். அப்படிச் செய்தால் பழத்தின் தன்மை மாற வாய்ப்பு உண்டு. இதுவும் தாற்காலிகமானதே. ஆகவே, தரமான பழங்களை வாங்கிச் சாப்பிட வேண்டும்.

வியாபாரிகளும் எவ்வித விதிமீறல் செயல்களிலும் ஈடுபடாமல் மாம்பழங்களை விற்பனை செய்ய வேண்டும். இல்லையெனில் மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றனர்.

**சர்க்கரை நோயாளிகளும் சாப்பிடலாம்**

மாம்பழங்களில் வைட்டமின் ஏ, சி போன்றவை உள்ளன. இதனால் வெப்பம் தணிந்து கண் பார்வை அதிகரிக்கும். மலச்சிக்கலைப் போக்குவதோடு, சிறுநீர் வெளியேற்றத்தைச் சீராக்கும். இளைஞர்களுக்கு நினைவாற்றலை அதிகரிக்கும். புதிய ரத்த அணுக்களைக் உருவாக்கவும், முகப்பொலிவு ஏற்படவும் மாம்பழங்கள் உதவும். சர்க்கரை நோயாளிகள் மாம்பழங்களை முற்றிலும் புறக்கணிப்பார்கள். அது சரியானதல்ல.

மாம்பழங்களால் சர்க்கரையின் அளவு மிகவும் அதிகரிக்க வாய்ப்பில்லை. அதனால் சர்க்கரை நோயாளிகளும் சாப்பிடலாம். அதேநேரத்தில் அறுவைச்சிகிச்சை செய்தவர்களும், சிறப்பு நோய்கள் (தோல், குடல், வாயு) உள்ளிட்டவை உள்ள சர்க்கரை நோயாளிகளும் மருத்துவர்களின் ஆலோசனையின் பெயரிலேயே சாப்பிட வேண்டும். இதுதவிர

புற்றுநோய், இதயநோய், ரத்த அழுத்தம் ஆகியவற்றை குணப்படுத்தும் பொருள்களும் மாம்பழங்களில் இயற்கையாகவே உள்ளன என்கின்றனர் சித்த மருத்துவர்கள்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பருவமழை தரும் பாலக்காட்டு கணவாய்

ஜூன் முதல் செப்டம்பர் வரை தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை பெய்வதற்குக் காரணமான மேகங்களை மேற்குத் தொடர்ச்சிமலை தடுத்து விடுகிறது. இதனால் தமிழகம் மழை மறைவுப் பிரதேசம் ஆகிறது. எனினும் பாலக்காட்டு கணவாய் வழியே தப்பும் மேகங்கள் ஓரளவு மழையைத் தருகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையின் முக்கிய கணவாய் பாலக்காட்டு கணவாய் கடல் மட்டத்தில் இருந்து இதன் உயரம் 144 மீ இந்தக் கணவாய் கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தையும் தமிழகத்தின் கோவைமாவட்டத்தையும் இணைக்கிறது. கேரளாவின் முதன்மையான வழித்தடமாக பாலக்காடு கணவாய் உள்ளது.

## ரூ.19 கோடி மதிப்பீட்டில் பவானிசாகர் அணை புனரமைப்பு

பவானிசாகர்: பவானிசாகர் அணையில், உலகவங்கி நிதி உதவியுடன் நீர்த்தேக்க பகுதியை பலப்படுத்தும் பணிகள் துவங்கின.

பவானிசாகர் அணை ஈரோடு மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், விவசாயத்திற்கு உயிர்நாடியாகவும் உள்ளது. மண்ணால் கட்டப்பட்ட இந்த அணை, 120 அடி உயரம் உள்ளது. தற்போது, 15 ஆழத்துக்கு சகதி படிந்துள்ளது. எனவே, 105 அடி வரை, 32 டி.எம்.சி., தண்ணீர் தேக்க முடியும். அணை கட்டப்பட்டு, 60 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில், கரைகள், ஷட்டர், மற்றும் நீர்தேங்கும் பகுதிகளில் கான்கிரீட் காரை சேதமடைந்து காணப்பட்டது. இதையடுத்து, அணையை பலப்படுத்த

உலக வங்கி, 19.71 கோடி நிதி வழங்கியது. அந்த நிதியில், அணையில் நீரை தேக்கி வைக்கும் கரைகளில் பெயர்ந்து போன கற்களுக்கு பதிலாக புதிய கற்கள் பதித்தும், ஷட்டர்களை சுத்தம் செய்து, அணைக்கட்டு பகுதியில் கான்கிரீட் பூச்சும் நடைபெறுகிறது.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது: தற்போது அணையின் நீர்மட்டம் குறைந்துள்ளதால், நீர் தேக்கப்பகுதியை புனரமைத்து பலப்படுத்தும் பணி நடக்கிறது. இதன் மூலம் அணை முழுகொள்ளளவை எட்டும்போது ஏற்படும் நீர் கசிவு தடுக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நாட்டி மாங்காய் விற்பனை அமோகம்

ஈரோடு: ஈரோடு, நேதாஜி தினசரி மார்க்கெட்டில், ஊறுகாய்க்கு உகந்த நாட்டி மாங்காய் விற்பனை அதிகரித்துள்ளது. ஈரோடு நேதாஜி மார்க்கெட்டுக்கு காஞ்சிகோவில், திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி, சேலம், சிவகிரி, சங்ககிரி உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாங்காய் மற்றும் மாம்பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. மார்க்கெட்டில் நேற்று இமாம் பசந்த், ஒரு கிலோ, 80 ரூபாய்க்கு விற்றது. இதேபோல் மல்கோவா கிலோ, 60 ரூபாய், நீலம், 40 ரூபாய் முதல், 50 வரை, செந்தூரம், 30 ரூபாய், கிளி மூக்கு, 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதில் விசேஷமாக ஊறுகாய்க்கு உகந்த பெரிய வகை நாட்டி மாங்காய் கிலோ, 25 ரூபாய்க்கு விற்றது. இதை மக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர்.

## படிமட்டம் இல்லாத விவசாய நிலங்கள்

ஊட்டி: நீலகிரியில் உள்ள விவசாய நிலங்களில், முறையான மேலாண்மை இல்லாததால், மண்ணரிப்பு மற் றும் நிலச்சரிவுக்கு, விவசாய நிலங்கள் காரணமாகி வருகின்றன.

நீலகிரியில் பருவமழையின் போது, ஆங்காங்கே மண்சரிவு, நிலச்சரிவு ஏற்படுவது வழக்கம்; பொதுவாக, மரம், செடி, கொடி, பாறைகள் நிறைந்த, மலை சாலை ஓரங்களில் மட்டுமே ஏற்பட்டு வந்த இத்தகைய பாதிப்புகள், தற்போது, விவசாய நிலங்களை ஒட்டிய சாலைகளிலும் ஏற்பட துவங்கியுள்ளன.

ஊட்டியில் இரு நாட்களாக பெய்து வரும் மழையில், ஊட்டி - முத்தோரை - பாலாடா சாலை உட்பட சில இடங்களில், பெரியளவில் மண்ணரிப்பு ஏற்பட்டு, போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஊட்டியைச் சேர்ந்த தாவரவியல் விஞ்ஞானி டாக்டர் ராஜன் கூறியதாவது:

உயரமான பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் படிமட்ட முறையில் விவசாயம் மேற்கொள்ளப்பட வேண்டும்; படிமட்டங்களில் தேயிலை உட்பட நிரந்தர பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும். விவசாய நிலத்தின் இடையே சரியான முறையில் மழைநீர் வழிந்தோட கால்வாய் அமைக்க வேண்டும்.

இத்தகைய விவசாய முறைகள் எதுவும், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதில்லை. இதனால், விவசாய நிலங்களில் மண் அரிக்கப்பட்டு, மண் சரிவு ஏற்படுகிறது. இதனால் போக்குவரத்து பாதிப்பு உட்பட பல பிரச்னைகள் ஏற்படுகின்றன.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண, மாவட்ட நிர்வாகம், தோட்டக்கலை துறை, வேளாண் பொறியியல் துறை, இந்திய மண், நீர் வள பாதுகாப்பு மையம் ஆகியவை இணைந்து செயல்பட வேண்டும். விவசாயிகள் மத்தியில் இதற்கான மாற்றத்தை கொண்டு வர, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு, ராஜன் கூறினார்.

இந்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு, ஆராய்ச்சி நிறுவன ஊட்டி மைய முதன்மை விஞ்ஞானி டாக்டர் மணிவண்ணன் கூறியதாவது: நீலகிரியில், பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பல வகை காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. சமீப காலமாக தோட்டங்களில் மண்ணரிப்பு அதிகரித்து வருகிறது' என, ஆய்வில் தெரிய வந்துள்ளது.

சரிவான பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில், அமைக்கப்படும் படிமட்டங்களில், புற்கள், தாவரங்களை நட்டு வைப்பதன் மூலம், மண்ணரிப்பு தடுக்கப்படும். கடந்த, 1960களில், நீலகிரியில் உள்ள விவசாய நிலங்களில் படிமட்டங்கள் அமைக்க, சிறப்பு நிதி கூட ஒதுக்கப்பட்டது. தற்போது விவசாயிகள், தங்கள் தோட்டங்களில் படிமட்டங்களை அமைத்துக் கொள்ள முன் வருவதில்லை. இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த அரசுக்கு, பரிந்துரை செய்துள்ளோம்.இவ்வாறு, மணிவண்ணன் கூறினார்.

## ரூ.7.47 கோடி தேயிலை ஏலம்

குன்னூர் : குன்னூரில், 7 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பிலான தேயிலை தூள் ஏலம் போனது.

குன்னூரில் உள்ள ஏல மையத்தில் விற்பனை எண், 22க்கு நடந்த ஏலத்தில், 7 லட்சத்து, 98 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இடம் பெற்றது. இதில், இலை ரகம், 4 லட்சத்து, 96 ஆயிரம் கிலோ; டஸ்ட் ரகம், 3,002 ஆயிரம் கிலோவும் இருந்தது. 96 சதவீதம் விற்பனையாகிய நிலையில்,

4 சதவீதம் மட்டுமே தேக்கமடைந்தது. 1 ரூபாய் விலை ஏற்றம் பெற்றது. உயர்ந்தபட்ச விலையாக, சி.டி.சி., ரகத்திற்கு கிலோ, 219 ரூபாய்; ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு, 252 ரூபாயும் கிடைத்தது. சராசரி விலையாக, இலை ரகத்தில் சாதாரண வகை, 82 ரூபாய் முதல், 84 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை தூள், 100 ரூபாயில் இருந்து, 140 ரூபாய் வரையிலும் ஏலம் போனது. டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை, 92 ரூபாயில் இருந்து, 93 ரூபாய் வரையிலும்,தரமான தேயிலை தூள், 110லிருந்து, 170 ரூபாய் வரையிலும் ஏலம் விடப்பட்டது. இதன் மொத்த மதிப்பு ரூ.7 கோடியே 47 லட்சம் ஆகும்.

## பீன்ஸ் விலை குறைவு

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து அதிகரிப்பால் பீன்ஸ் ரூ.80 க்கு விலை குறைந்துள்ளது.
திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், பழநி, ரெட்டியார்சத்திரம், தொப்பம்பட்டியில் 106 எக்டேரில் பீன்ஸ் சாகுபடியாகிறது. திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் பீன்ஸ் 300 முதல் 400 கிலோ வரை விற்பனைக்கு வரும். மேலும், வெளிமாநிலங்களில் இருந்தும் விற்பனைக்கு வருகிறது.
பெரிய அளவில் சாகுபடி இல்லாததால் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக ஒரு கிலோ பீன்ஸ் ரூ.110 முதல் ரூ.100 க்கும் விற்றது. தற்போது உள்ளூர் மற்றும் வெளியூர் வரத்து அதிகரித்துள்ளதால் நேற்று ஒரு கிலோ ரூ.80 க்கு விற்பனையானது.

## வேளாண்மை துறையின் மூலம் நெல்நடவு இயந்திரம் வழங்கல்

சின்னசேலம்: சின்னசேலம் தாலுகா அலுவலகத்தில் ஜமாபந்தி முகாம் துவங்கியது.

சின்னசேலம் தாலுகா அலுவலகத்தில் நடந்த முகாமை, கலெக்டர் லட்சுமி தலைமை தாங்கி, துவக்கி வைத்தார். தாசில்தார் கமலம் முன்னிலை வகித்தார். முதல் நாளில், வடக்கனந்தல் குறுவட்டத்தில் உள்ள எடுத்தவாய்நத்தம், செல்லம்பட்டு உள்ளிட்ட 6 கிராம மக்களிடம் இருந்து 195 மனுக்கள் பெறப்பட்டன.

இதில், அமுதா, சர்வேசன் உள்ளிட்டவர்களுக்கு பட்டா பெயர் மாற்றம், வரதராஜன் என்பவருக்கு குடும்ப அட்டையையும் ,வேளாண்மை துறை சார்பில் கல்லாநத்தம் கிராமத்தைச் சேர்ந்த ஜெயகுமார் என்பவருக்கு மானியத்துடன் நெல்நடவு இயந்திரம் ஆகியவற்றை கலெக்டர் லட்சுமி வழங்கினர்.

விழுப்புரம் வேளாண்மை இயக்குனர் ரவி, தனி தாசில்தார்கள் ஞானம், சமுகபாதுகப்பு திட்டம் பாண்டியன், கல்வராயன்மலை தனிதாசில்தார் மணிவண்ணன், துணை தாசில்தார்கள் கோவர்த்தனன்,

சத்தியநாராயணன், வருவாய் ஆய்வாளர்கள் வித்தியாதரன், மனோஜ்முனியன் நிலஅளவை வட்ட சார்-ஆய்வாளர் சிமிட்டகவுண்டர், பி.டி.ஓ., (பொறுப்பு) பார்வதி

வி.ஏ.ஓ.,க்கள் சங்க தலைவர் ஜோதி மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.

## ஆணைமடுவு அணை நீர்மட்டம் மழையால் 26 அடியாக உயர்வு

வாழப்பாடி: புழுதிக்குட்டை ஆணைமடுவு அணையின் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த தொடர் மழையால், அணையின் நீர்மட்டம், 26 அடியாக உயர்ந்தது.

வாழப்பாடி அடுத்த புழுதிக்குட்டை, வசிஷ்டநதியின் குறுக்கே, ஆணைமடுவு அணை உள்ளது. கடந்த, 2014ல் பருவ மழை பொய்த்து, கடும் வறட்சி ஏற்பட்டதால், அந்த அணை நீர்மட்டம், 23 அடிக்கு மேல் உயரவில்லை. 2015ல் கணிசமான அளவிற்கு மழை பெய்ததால், டிசம்பர் இறுதியில் நீர்மட்டம், 62 அடியை எட்டியது. அணையில், 230 மில்லியன் கனஅடி தண்ணீர் தேங்கியது. கடந்த ஜனவரியில் இருந்து, ஆயக்கட்டு வாய்க்கால் பாசனம், நேரடி ஆற்றுப்பாசனம் மற்றும் ஏரிப்பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், ஏப்ரல் இறுதியில், அணையின் நீர்மட்டம், 14 அடியாக குறைந்தது. 17 மில்லியன் கனஅடி தண்ணீர் மட்டுமே, சேறும் சகதியுமாக கிடந்தது. அணையின் நீர்பிடிப்பு பகுதியில், மே மாதத்தில் தொடர்ந்து பெய்த பலத்த மழையால், வனப்பகுதி நீரோடைகளில் இருந்து, அணைக்கு நீர்வரத்துவங்கியது. தற்போது, அணையின் நீர்மட்டம், 26.41 அடியாக உயர்ந்துள்ளது. அணையில், 36.36 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கியுள்ளது. பருவமழை துவங்கும் முன், கோடை மழையில், அணையின் நீர்மட்டம், 26 அடியாக உயர்ந்ததால், இந்த ஆண்டு ஆணைமடுவு அணை முழு கொள்ளளவை எட்டும் என, விவசாயிகள் மகிழ்ச்சியுடன் கூறினர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாமக்கல் பகுதியில் கறிக்கோழி விலை திடீர் உயர்வு

நாமக்கல் : நாமக்கல் பகுதியில் கறிக்கோழி விலை திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. உற்பத்தி குறைந்ததை காரணம் காட்டி, வியாபாரிகள் விலையை உயர்த்தி வருகின்றனர். தமிழகத்தில் ஈரோடு, நாமக்கல், ஓசூர் பகுதியில் கறிக்கோழிகள் அதிகம் வளர்க்கப்படுகிறது. பல்லடத்தில் கறிக்கோழியின் பண்ணை கொள்முதல் விலை தினமும் நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஒரு கிலோ கறிக்கோழியின் பணணை கொள்முதல் விலை ரூ.91 ஆக உள்ளது.

கறிக்கோழியின் விற்பனை கடந்த வாரங்களில் தமிழகம் முழுவதும் அதிகரித்துள்தால் விற்பனை விலை உயர்ந்துள்ளது. நாமக்கல் பகுதியில் கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.140 மற்றும் ரூ.150க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று ஒரு கிலோ கோழிக்கறி தோலுடன் ரூ.170க்கும், உறித்தது ரூ.190க்கும் விற்பனை செய்யப்பட்டது. மேலும் உயிருடன் ஒரு கிலோ கறிக்கோழி ரூ.115க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த விலை உயர்வால் கோழிக்கறி பிரியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இருப்பினும் நாமக்கல் பகுதியில் உள்ள பல பிராய்லர் கடைகளில் நேற்று வழக்கத்தை விட 2 மடங்கு கோழிக்கறி விற்பனையானது. இதுகுறித்து கறிக்கோழி விற்பனையாளர்கள் கூறுகையில், ‘கோடை காலத்தில் கோழிகளின் பராமரிப்பு செலவு அதிகம் என்பதால், பண்ணையாளர்கள் கறிக்கோழி வளர்ப்பை குறைத்துள்ளனர். இதனால் உற்பத்தி குறைந்துள்ளது. அதே சமயம் விற்பனை அதிகரிப்பதால், டிமாண்ட் ஏற்பட்டு விலை உயர்வு செய்யப்படுகிறது. இந்த விலை மேலும் உயர வாய்ப்புள்ளது’ என்றனர்.

# அதிக வருவாய் பயிர்களை தேர்வு செய்ய மண் பரிசோதனை அவசியம் விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி வேண்டுகோள்

நாமக்கல் : அதிக வருவாய் தரும் பயிர்களை தேர்வு செய்ய, மண் பரிசோதனை அவசியம் என விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய ஆய்வுக்கூடத்தில், மாவட்டத்தில் உள்ள 192 கிராமத்தை சேர்ந்த 528 விவசாயிகளிடம் இருந்து 737 மண் மாதிரிகள் கடந்த ஆண்டு பெறப்பட்டது.

மண்ணின் அமிலம் மற்றும் காரத்தன்மை, உப்பு, ஊட்டச்சத்துகளின் அளவு குறித்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 94.5 சதவீதம், மண்ணில் உள்ள அமில, காரத்தன்மை மற்றும் உப்புத்தன்மை பயிர்களை பாதிக்கும் வகையில் இல்லை என்பது தெரியவந்துள்ளது. 5 சத நிலத்தில் மட்டும் அமில, காரத்தன்மை உள்ளது. மண் பரிசோதனை செய்வதன் மூலம் விவசாயிகள் தங்களுடைய விளைநிலத்தின் மண் வளம் மற்றும் எந்த வகையான தானியங்களைப் பயிர் செய்ய முடியும் என்பதை அறிய முடியும்.

என்ன வகையான உரமும், ஊட்டச் சத்தும் மண்ணுக்குத் தேவைப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ளலாம். மண் அரிப்பு, மண் வளம் குன்றுதல் போன்றவற்றையும் அறியலாம். மேலும், தேவைக்கு அதிகமாக உரமிடுவதை தடுக்க முடியும். அதிகம் வருவாய் தரக்கூடிய பயிர்களை தேர்வு செய்து விவசாயம் செய்ய முடியும். குறைந்த செலவில் கூடுதல் மகசூல் பெறலாம். ஆகவே, ஆண்டுக்கு ஒரு முறை மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்ய வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04286-266345 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மண் வளத்தை அதிகரிக்க கோடை உழவு பணி தீவிரம்**

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கே கோடை மழை ெபய்து வருகிறது. இதை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் கூறியது: வெப்ப மண்டலமான தர்மபுரி மாவட்டக்கில் கோடை காலக்கில் மேல் மண் அகிக வெப்பமடைகிறகு. இந்த வெப்பமானது கீழ்ப்பகுதிக்குச் செல்லும் போது நிலத்தடிநீர் ஆவியாகி வெளியேறி விடும். எனவே மேல் மண்ணை உமுகு, ஒரு புழுதிப்படலம் அமைத்து விட்டால் விண்வெளிக்கும் வேர் சூழ் மண்டலத்துக்கும் தொடர்பு அறுந்துவிடும்.

இதனால் நிலத்தில் உள்ள ஈரம் ஆவியாகாமல் இப்புழுதிப்படலம் தடுத்துவிடும். கோடை மழையைப் பயன்படுத்தி நிலத்தை நன்கு உழுவதால், மேல்மண் துகள்களாகிறது. இதனால் மண் வெப்பத்தை உறிஞ்சி விரைவில் குளிர்ந்துவிடும். இதனால் நிலத்தில் நீர் இறங்கும் திறன் உயரும். மண்ணில் நல்ல காற்றோட்டம் கிடைக்கிறது. வயலிலுள்ள களைகள், குறிப்பாக கோரை போன்றவை கோடை உழவு செய்வதால் மண்ணின் மேற்பரப்பிற்குக் கொண்டு வரப்பட்டு, சூரிய வெப்பத்தால் உலர வைத்து அழிக்கப்படுகின்றன.

கோரைக்கிழங்குகளைக் கைகளால் சேகரித்தும் அழிக்கலாம். நிலத்தின் அடியில் உள்ள தீமை செய்யும் பூச்சிகளின் கூட்டுப்புழுக்கள், கோடை உழவு செய்வதால் வெளியில் கொண்டு வரப்பட்டு வெயிலில் காயவைக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. பறவைகள் அதை உண்டு, கூட்டுப்புழுக்களை அழிக்கின்றன. அறுவடை செய்யப்பட்டுள்ள வயல்களிலுள்ள முந்தைய பயிரின் தாள்கள், வேர்கள், கட்டைகள் போன்றவை கோடை உழவின்போது மக்கி விடுவதால் மண்ணின் அங்ககச் சத்து அதிகரிக்கிறது.

இதனால் மண்ணில் நுண்ணுயிர்களின் செயல்பாடு மேம்படுகிறது. இதனால் மண்வளம் மேம்படுகிறது. மண்ணரிப்பும் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் மழைநீர் வழிந்தோடி வீணாகாமல்

நிலத்துக்குள் சேமிக்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் தங்கள் நிலத்தில் கோடை உழவு செய்து மண்வளம், நீர்வளத்தை பெருக்க வேண்டும். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

**காய்கறிகளின் விலை உயர்வு**

சேலம் : தமிழகத்தில் முழுவதும் பரவலாக காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. கடந்தாண்டு பெய்த மழையால் நவம்பர் முதல் மார்ச் வரை காய்கறிகளின் விளைச்சல் அமோகமாக இருந்தது. இதனால் அனைத்து காய்கறிகளின் விலையும் சரிந்தது. இந்நிலையில் கடந்த மார்ச், ஏப்ரலில் அடித்த கடும் வெயில் காரணமாக போர்வெல், கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது. இதனால் விவசாய பணிகள் நடக்கவில்லை. கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு, விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

தொடர் முகூர்த்தம் காரணமாக கடந்த இரு வாரத்தைவிட, இந்த வாரத்தில் அனைத்து காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது. கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்பு ரூ.20க்கு விற்ற ஒரு கிலோ தக்காளி நேற்று நிலவரப்படி ரூ.55 என விலை உயர்ந்துள்ளது. மேலும் இன்று (6ம் தேதி) மற்றும் புதன்கிழமையில் அடுத்தடுத்து முகூர்த்தம் வருவதால் அனைத்து காய்கறிகளின் விலையும் 30 சதவீதம் உயர்ந்துள்ளது.

நேற்று நிலவரப்படி கத்தரிக்காய், வெண்டைக்காய், புடலங்காய், பீர்க்கங்காய், பீட்ரூட், நூல்கோல் தலா கிலோ ரூ.40 எனவும், அவரை ரூ.50 எனவும், பாகல் ரூ.40 எனவும், சின்னவெங்காயம் ரூ.30 எனவும், பெரியவெங்காயம் ரூ.20 எனவும், உருளைக்கிழங்கு ரூ.30 எனவும், கேரட் ரூ.50 எனவும், இஞ்சி ரூ.60 எனவும், முட்டைகோஸ் ரூ.30 எனவும், காலிபிளவர் ஒரு பூ ரூ.25 எனவும், முருங்கைக்காய் ஒன்று ரூ.5 எனவும், பச்சைப்பட்டாணி ரூ.100 எனவும், வாழைக்காய் ஒன்று ரூ.7 எனவும், பெங்களூர் தக்காளி ரூ.50 என விற்பனை செய்யப்படுகிறது. வைகாசி மற்றும் ஆனி மாதத்தில் பத்துக்கும் மேற்பட்ட முகூர்த்தங்கள்

வருகின்றன. அதனால் இன்னும் ஒன்றரை மாதத்திற்கு இதே விலைதான் நீடிக்கும் என காய்கறி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கரூரில் நாவல் பழம் விலை கடும் உயர்வு**

கரூர் : நாவல் பழம் சீசன் துவங்கியிருக்கிறது. கரூர் மாவட்டத்தில் ஓரளவுக்குத்தான் நாவல் பழம் விளைச்சல் உள்ளது. ஆந்திராவில் இருந்து நாவல் பழம் விற்பனைக்கு அதிக அளவில் கரூர் வந்துள்ளது. மருத்துவ குணம் கொண்டது என்பதால் பொதுமக்கள் வாங்குகின்றனர், விலை அதிகமாக இருப்பதால் விற்பனை குறைவாக இருக்கிறது. கிலோ ரூ300க்கு விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் 100 கிராம் 200 கிராம் என்ற அளவில்தான் வாங்கிசெல்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோவையில் காய்கறி விலை கிடுகிடு உயர்வு



கோவை,

கோவையில் காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. இதில் அதிகபட்சமாக பீன்ஸ் கிலோ ரூ.100–க்கும், தக்காளி கிலோ ரூ.60–க்கும் விற்பனையாகிறது.

<u>காய்கறிகள்</u>

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் உற்பத்தியாகும் காய்கறிகள், கோவை மாவட்ட சந்தைகளுக்கு லாரிகள் மூலமாக கொண்டு வரப்படுகின்றன. இதேபோல் கோவை மாவட்டத்தின் புறநகர் பகுதிகளான கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர், மேட்டுப்பாளையம், காரமடை,

பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் உற்பத்தியாகும் காய்கறிகளும் கோவை சந்தைகளுக்கு கொண்டு வரப்படுகின்றன.
இந்த சந்தைகளில் இருந்து மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கு காய்கறிகள் கொண்டு செல்லப் பட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதேபோல் நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கேரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு, முள்ளங்கி, டர்னிப், கோஸ் ஆகியவை கோவைக்கு கொண்டுவரப்பட்டு விற்கப்படுகின்றன.

<u>பீன்ஸ் கிலோ ரூ.100</u>

இந்தநிலையில் கோவையில் கடந்த ஒரு மாதமாக காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்து வரு கிறது. இதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். கோவையில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

நாட்டு தக்காளி கிலோ ரூ.60, ஆப்பிள் தக்காளி கிலோ ரூ.62, கத்தரிக்காய் கிலோ ரூ.40, பீன்ஸ் கிலோ ரூ.100, வெண்டைக்காய் கிலோ ரூ.40, கேரட் கிலோ ரூ.40, கோஸ் கிலோ ரூ.30, சேனைக்கிழங்கு கிலோ ரூ.50–, பீட்ரூட் கிலோ ரூ.25, அவரைக்காய் கிலோ ரூ.55, முருங்கைக்காய் கிலோ ரூ.50, இஞ்சி கிலோ ரூ.64–க்கும் விற்பனையானது. சின்ன வெங்காயம் கிலோ ரூ.42, பெரிய வெங்காயம் கிலோ ரூ.20, உருளைக்கிழங்கு கிலோ ரூ.44, முள்ளங்கி கிலோ ரூ.36, நூல்கோல் கிலோ ரூ.48, கோஸ் கிலோ ரூ.30, காலிபிளவர் கிலோ ரூ.46, பூண்டு கிலோ ரூ.80 முதல் ரூ.140, குடை மிளகாய் கிலோ ரூ.60, பச்சை மிளகாய் கிலோ ரூ.40 முதல் ரூ.60–க்கும் விற்கப்பட்டன.

<u>வாரச்சந்தை</u>

பெரியநாயக்கன்பாளையம் வாரச்சந்தையில் காய்கறிகளின் நேற்றைய விலை விவரம் வருமாறு:–

சின்னவெங்காயம் ரூ.45, பெரியவெங்காயம் ரூ.18, பீன்ஸ் ரூ.90, அவரைக்காய் ரூ.70, முருங்கைக்காய் ரூ.55, கேரட் ரூ.54, வெண்டைக்காய், காலிப்பிளவர் ஆகியவை ரூ.50, கத்தரிக்காய், முள்ளங்கி, முட்டைக்கோஸ் ஆகியவை ரூ.40–க்கும் விற்பனை செய்யப்பட்டன. ஆப்பிள்தக்காளி மற்றும் நாட்டுத்தக்காளி விலை கிலோ ரூ.66–ல் இருந்து 70 வரை விற்பனை செய்யப்பட்டன. எனவே பொதுமக்கள் தக்காளியை குறைவாகவே வாங்கிச் சென்றனர்.

இது தொடர்பாக காய்கறி வியாபாரி ஒருவர் கூறுகையில், ‘கடந்த மாதங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால், போதிய தண்ணீர் கிடைக்காமல் காய்கறி விளைச்சல் கடுமையாக பாதித்தது. கோவைக்கு காய்கறி வரத்து குறைந்து உள்ளது. இதுவே விலை உயர்வுக்கு காரணம் என்றார்.

## வால்பாறையில் தேயிலை செடிகளை தாக்கும் கொசுக்களை தடுக்க நடவடிக்கை



வால்பாறை,

வால்பாறையில் தேயிலை செடிகளை தேயிலை கொசுக்கள் தாக்குவதால், அதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

தேயிலை

வால்பாறை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் ஏராளமான எஸ்டேட்டுகள் உள்ளன. இங்கு தேயிலை, ஏலக்காய், காபி, மிளகு போன்ற பணப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதில் ஆண்டு தோறும்

பயன்தரக்கூடிய தேயிலை மட்டும் 12 ஆயிரத்து 678 ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. தேயிலை செடிகளை அந்தந்த கால சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பல்வேறு நோய்கள், பூச்சிகள் தாக்குகின்றன.

தற்போது வால்பாறை பகுதியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. தொடர் மழையின் காரணமாக தேயிலை மகசூல் அதிகரித்துள்ள போதிலும், தேயிலை செடிகளில் உள்ள கொழுந்து இலைகளை தேயிலை கொசுக்கள் தாக்க தொடங்கி உள்ளன. இதனால் தேயிலை உற்பத்தி பாதிக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

<u>கொழுந்து இலைகள்</u>

இந்த கொசுக்கள் தேயிலை செடிகளில் உள்ள தேயிலைத்தூள் தயாரிப்பதற்கு பயன் படக்கூடிய கொழுந்து இலைகளை கடித்து அதிலுள்ள பச்சையத்தை உறிஞ்சி விடுகிறது. இதனால் கொழுந்து இலைகள் கருகி காய்ந்து கீழே விழுந்து விடுவதால், அதிகளவில் தேயிலை உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக தோட்ட நிர்வாகங்கள் தேயிலை கொசுக்களின் தாக்குதலின் ஆரம்ப கட்டத்திலேயே கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

கடந்த ஆண்டு வால்பாறை பகுதியில் தேயிலை கொசுக்களின் தாக்குதல் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு அதிகளவில் இருந்தது. இதனால் அனைத்து தேயிலை தோட்ட நிர்வாகங்களும் பெரியளவில் நஷ்டத்தை சந்தித்தன. இதையொட்டி தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய போனஸ் அளவும் குறைக்கப்பட்டது. இதனால் தேயிலை தோட்ட தொழிலாளர்களும் பாதிப்படைந்தனர்.

<u>தடுக்க நடவடிக்கை</u>

இந்த நிலையில் இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் வாரத்திலேயே அனைத்து தேயிலை தோட்டங்களிலும் தேயிலை கொசுக்களின் தாக்குதல் தொடங்கி உள்ளது. இதனால் கடந்த ஆண்டை போல பெரியளவில் கொசு தாக்குதல் ஏற்படாமலும், அதனால் தோட்ட நிர்வாகங்கள் நஷ்டத்தை சந்திக்கும் சூழ்நிலை உருவாகாமலும் தடுக்கும் விதத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேயிலை கொசுக்களின் தாக்குதலை தடுக்க ‘குயினல்பாஸ்’ என்ற மருந்து ஒரு லிட்டரை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஹெக்டருக்கு 7 நாட்கள் இடைவெளியில் தெளித்து வருகின்றனர். இதன் மூலம் தேயிலை

மகசூல் பாதிப்பது தடுக்கப்படும் என்று தோட்ட நிர்வாகத்தினர் நம்பிக்கையில் உள்ளனர்.

இது குறித்து தொழிலாளர்கள் கூறுகையில், தேயிலை மகசூல் இழப்பை ஏற்படுத்தும் தேயிலை கொசுக்களின் தாக்குதல் தற்போதே தொடங்கி விட்டது. இதை தடுக்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது என்று கூறினார்கள்.

## வத்தலக்குண்டுவில் வாழைத்தார்கள் விலை உயர்வு; விவசாயிகள் மகிழ்ச்சி



வத்தலக்குண்டு,

வத்தலக்குண்டுவில், வழைத்தார்களின் வரத்து குறைந்ததால் விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

வாழை சாகுபடி

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு, விருவீடு, பழைய வத்தலக்குண்டு, கண்ணாபட்டி, கோம்பைபட்டி உள்ளிட்ட பகுதிகளில்

ஏராளமான ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அவை தற்போது அறுவடை செய்யப்பட்டு வத்தலக்குண்டுவில் உள்ள வாழைக்காய் கமிஷன் மண்டிகளுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

இங்கிருந்து வியாபாரிகள் அவற்றை கொள்முதல் செய்து சென்னை, கோவை, திருச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வருகின்றனர். இதற்கிடையே கடந்த சில நாட்களுக்கு முன்பு வத்தலக்குண்டு பகுதியில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதில் பல பகுதிகளில் உள்ள வாழை மரங்கள் முறிந்து சேதம் அடைந்தன.

<u>விலை உயர்வு</u>

ஆனால் ஒரு சில பகுதிகளில் மட்டும் வாழைமரங்கள் மழைக்கு தப்பியது. இதனால் கமிஷன் கடைகளுக்கு வாழைத்தார்களின் வரத்து குறைந்தது. இதனால் அவற்றை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். இதன்காரணமாக அவற்றின் விலை உயர்ந்து காணப்பட்டது.

அதன்படி கடந்த வாரம் ரூ.300–க்கு விற்ற ரஸ்தாலி தார் ஒன்று நேற்று ரூ.500–க்கு விற்பனை செய்யப்பட்டது. இதே போல் ரூ.400–க்கு விற்ற கற்பூரவல்லி ரூ.600–க்கும், ரூ.500–க்கு விற்ற செவ்வாழை 700–க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதேபோல் மற்ற வாழைத்தார்களின் விலையும் கணிசமாக உயர்ந்து காணப்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## நத்தம் பகுதியில் 2–வது நாளாக கனமழை விவசாயிகள் மகிழ்ச்சி

திண்டுக்கல்,

நத்தம் பகுதியில், 2–வது நாளாக கனமழை கொட்டி தீர்த்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

<u>2–வது நாளாக மழை</u>

திண்டுக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த 2 நாட்களாக பலத்த மழையும், சாரல் மழையும் பெய்து வருகிறது. குறிப்பாக நத்தம் மற்றும் அதன் சுற்று வட்டார கிராமங்களில் நேற்று முன்தினம் சூறாவளி காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதில் சிக்கி நத்தத்தில்,

திண்டுக்கல் செல்லும் சாலையோரத்தில் நின்றிருந்த ஒரு புளியமரம் நடுரோட்டில் சாய்ந்து விழுந்தது.

இதன் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சாலையின் இருபுறத்திலும் வாகனங்கள் அணிவகுத்து நின்றன. இது குறித்து தகவல் அறிந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அந்த மரத்தை சாலையில் இருந்து அப்புறப்படுத்தினர். அதன்பின்னரே போக்குவரத்து சீரானது. இதற்கிடையே 2–வது நாளாக நேற்றும் நத்தம் பகுதியில் கனமழை கொட்டி தீர்த்தது.

விவசாயிகள் மகிழ்ச்சி

குறிப்பாக சாணார்பட்டி, கோபால்பட்டி, விராலிபட்டி, மேட்டுக்கடை, நத்தம் மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் நேற்று பிற்பகல் 2.30 முதல் மாலை 4 மணி வரை பலத்த மழை பெய்தது. இந்த மழை காரணமாக, திண்டுக்கல்–நத்தம் சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அந்த சாலையில், எதிரே வருகிற வாகனங்கள் தெரியாத நிலை ஏற்பட்டது. இதனால் முகப்பு விளக்குகளை எரிய விட்டப்படி வாகனங்கள் சென்றன.

தொடர்ந்து சாரல் தூறியபடியே இருந்தது. கருமேகம் சூழ்ந்து வானம் கும்மிருட்டாக காட்சி அளித்தது. இரவு நேரத்தில் இதயத்தை வருடும் இதமான சூழல் நிலவியது. கடந்த 2 நாட்களாக பெய்த கனமழையினால் தென்னை, மா, கொய்யா சாகுபடி அதிகரிக்கும் என்பதால் நத்தம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல்லில் மழை

இதேபோல் திண்டுக்கல் நகர் மற்றும் புறநகர் பகுதிகளிலும் மாலை 3 மணிக்கு திடீரென மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை சிறிது நேரம் நீடித்தது. இந்த மழை காரணமாக சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதியில் மழை வெள்ளம் தேங்கி நின்றது.

கொடைக்கானலில் நேற்று மதியம் 12 மணி முதல் 2 மணி வரை சாரல் தூறி கொண்டே இருந்தது. இதனால் சுற்றுலா பயணிகள், வெளியே செல்லாமல் விடுதிகளிலேயே முடங்கினர். பழனி, ஒட்டன்சத்திரம், வத்தலக்குண்டு உள்பட மாவட்டத்தின் பிற பகுதிகளில் கார்மேகம் சூழ்ந்து வானம் கும்மிருட்டாக காட்சி அளித்த போதிலும் மழை பெய்யவில்லை.

**ஈரோடு நேதாஜி தினசரி மார்க்கெட்டில் விற்பனைக்கு குவிந்த மாம்பழங்கள்**



ஈரோடு,

ஈரோடு நேதாஜி தினசரி மார்க்கெட்டில் மாம்பழங்கள் விற்பனைக்கு குவிந்துள்ளன. செந்தூரம் கிலோ ரூ.30–க்கு நேற்று விற்பனையானது.

<u>மாம்பழ சீசன்</u>

ஈரோடு ஆர்.கே.வி. ரோட்டில் நேதாஜி தினசரி மார்க்கெட் உள்ளது. இந்த மார்க்கெட்டில் காய்கறிகள் மற்றும் பழ வகைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் இருந்து காய்கறிகளும், சிவகிரி, சேலம், திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி போன்ற பகுதியில் இருந்து பழ வகைகளும் இங்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

இந்த காய்கறிகள் மற்றும் பழங்களை ஈரோடு மற்றும் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த ஏராளமான வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வாங்கி செல்கிறார்கள். தற்போது மாம்பழ சீசன் தொடங்கி உள்ளதால் ஈரோடு நேதாஜி மார்க்கெட்டுக்கு மாம்பழ வரத்து அதிக அளவில் உள்ளது. அங்குள்ள கடைகளில் மாம்பழங்கள் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளது.

ரூ.30–க்கு விற்பனை

இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஈரோடு நேதாஜி தினசரி மார்க்கெட்டில் வழக்கத்தைவிட பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் கூட்டம் அதிகமாக இருந்தது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்பு மாம்பழங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தன. ஆனால் தற்போது வரத்து அதிக அளவில் உள்ளதால் அனைத்து வகை மாம்பழங்களும் கிலோவுக்கு ரூ.30 முதல் ரூ.50 வரை குறைந்து விற்பனையாகிறது. அதனால் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் ஆர்வமுடன் மாம்பழங்களை வாங்கிச்சென்றனர். ரூ.60 வரை விற்பனையான செந்தூரம் மாம்பழம் நேற்று விலை குறைந்து கிலோ ரூ.30–க்கு விற்பனையானது.

மேலும் மல்கோவா மாம்பழம் கிலோ ரூ.60–க்கும், இமாம் பசத் மாம்பழம் ரூ.80–க்கும், நீலம் மாம்பழம் ரூ.40 முதல் ரூ.50 வரையும், கிளி மூக்கு மாம்பழம் ரூ.20–க்கும் விற்பனையானது. பெரிய அளவில் காணப்பட்ட நாட்டி ரக மாங்காய் கிலோ ரூ.25–க்கு விற்பனையானது. இந்த மாங்காயை பொதுமக்கள் ஊறுகாய் போடுவதற்காக ஆர்வமுடன் வாங்கி செல்கிறார்கள்.

## 15 ஆயிரம் ஏக்கருக்கு எந்திர நடவு மானியம் வழங்க இலக்கு கலெக்டர் பழனிசாமி பேச்சு



நாகை மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கருக்கு எந்திர நடவு மானியம் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று நாகை கலெக்டர் பழனிசாமி கூறினார்.

முன்னேற்பாடு கூட்டம்

முதல்-அமைச்சர் ஜெயலலிதா கடந்த 1-ந்தேதி நடப்பு ஆண்டு குறுவை பருவத்திற்கான குறுவை தொகுப்பு திட்டத்தினை அறிவித்துள்ளார். அதன்படி குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதைதொடர்ந்து நாகை மாவட்டத்தில் குறுவை தொகுப்பு திட்டத்தை செயல்படுத்துவது குறித்து வேளாண்மை துறை அலுவலர்களுடனான முன்னேற்பாடு கூட்டம் நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

பாய் நாற்றங்கால் தயாரித்து நடவு எந்திரம் கொண்டு நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். நாகை மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கருக்கு எந்திர நடவு மானியம் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த மானிய தொகை விவசாயிகள் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். நெல் நுண்ணூட்ட சத்து ஏக்கருக்கு ரூ.170 மானியத்தில் 20 ஆயிரம் ஏக்கருக்கு வழங்கப்படும். துத்தநாக சல்பேட் ஏக்கருக்கு ரூ.400 மானியத்தில் 27 ஆயிரம் ஏக்கருக்கு வழங்கப்படும். காவிரி பாசன பகுதி மற்றும் கல்லணை கால்வாய் பாசன பகுதி விவசாயிகளுக்கு பயிறு சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.1,400 மானியம் வழங்கப்படும். இதில் உழவு மேற்கொள்ள ஏக்கருக்கு ரூ.500 மானியமும், பயிறு வகை விதைக்கு ஏக்கருக்கு ரூ.900 மானியமும் வழங்கப்படும். மேலும் பாசன நீரை வீணாக்காமல் விவசாயிகள் தங்கள் வயல்களுக்கு எடுத்து செல்ல வசதியாக ரூ.20 ஆயிரம் மானியத்தில் பைப்புகள் வழங்க 250 யூனிட் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மானியம்

வெண்ணாறு பாசன பகுதி நிலத்தின் வளத்தை மேம்படுத்த ஏக்கருக்கு ரூ.500 உழவு மானியம் வழங்கப்பட உள்ளது. விவசாயிகள் வேளாண்மை பொறியியல் துறை, கூட்டுறவு துறை அல்லது தனியார் டிராக்டரை பயன்படுத்தி உழவு பணி மேற்கொண்டு அதற்கான விண்ணப்பம் மற்றும் உழவு பணிக்கான பட்டியலை வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் சமர்ப்பித்தால் உழவு மானியம் ஏக்கருக்கு ரூ.500 விவசாயிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். மேலும் ஏக்கருக்கு ரூ.1,400 மானியத்தில் 20 கிலோ பசுந்தாள் உர விதைகள் வேளாண் விற்பனை மையம் மூலமாக வெண்ணாறு பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டம் குறித்த விவரங்களை வேளாண்மை உதவி இயக்குனர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம். மேலும் வேளாண் அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் அந்தந்த பகுதிகளில் இத்திட்டம் குறித்து

விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விவசாயிகளை கொண்டு கூட்டம் நடத்திட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் சேகர், வேளாண்மை துணை இயக்குனர்கள் கணேசன், சண்முகம், வேளாண்மை உதவி இயக்குனர்கள் சந்திரகாசன், உதயகுமார் மற்றும் வேளாண்மை அலுவலர்கள், வேளாண்மை உதவி அலுவலர்கள், செயற்பொறியாளர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஊட்டியில் தொடர் மழையால் காய்கறி விலை உயர்வு தக்காளி ஒரு கிலோ ரூ.50–க்கு விற்பனை



ஊட்டி,
ஊட்டியில் பெய்து வரும் தொடர் மழையால் காய்கறிகள் விலை அதிகரித்து உள்ளன. தக்காளி ஒரு கிலோ ரூ.50–க்கு விற்பனையாகிறது.

தொடர் மழை

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மாதம் இறுதியில் பெய்ய தொடங்கிய மழை விடாமல் நாள்தோறும் பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள அணைகள், குளங்கள், குட்டைகள் உள்ளிட்ட நீராதரங்களுக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்து உள்ளது.

மேலும் இந்த தொடர் மழை காரணமாக காய்கறிகள் அழுகும் நிலை ஏற்பட்டு உள்ளது. ஊட்டி அருகே உள்ள கப்பத்தொரை பகுதியில் கடந்த வாரம் பெய்த மழை காரணமாக விவசாய நிலங்களுக்குள் மழைநீர் புகுந்தது. இந்த நிலையில் தொடர் மழையால் காய்கறிகளின் விலையும் அதிகரித்து உள்ளது.

உருளைக்கிழங்கு, கேரட்

ஊட்டி உழவர் சந்தையில் தற்போது உருளைக்கிழங்கு கிலோ ஒன்று ரூ.44–க்கும், கேரட் ரூ.40–க்கும், பீட்ரூட் ரூ.40–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுதவிர பட்டாணி கிலோ ரூ.140–க்கும், ஊட்டி அவரை ரூ.80–க்கும், புஷ் பீன்ஸ், டபுள் பீன்ஸ் தலா ரூ.90–க்கும் விலை போகிறது. நாட்டு தக்காளி ஒரு கிலோ ரூ.47, ஆப்பிள் தக்காளி ஒரு கிலோ ரூ.50–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த தொடர் மழையால் காய்கறிகளை அறுவடை செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டு உள்ளது. இதனால் ஊட்டி மார்க்கெட்டிற்கு வரும் காய்கறிகளின் அளவும் குறைந்து உள்ளது. மேலும் சமவெளி பகுதிகளில் விளையும் தக்காளி, முருக்கைக்காய், சேனைக்கிழங்கு, பீர்க்கங்காய் உள்ளிட்ட காய்கறிகளின் விலையும் கடுமையாக உயர்ந்து உள்ளது.

இந்த விலை உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதுகுறித்து ஊட்டி வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

ஊட்டியில் கடந்த ஒரு வாரமாக விடாமல் மழை பெய்து வருகிறது. இந்த மழையால் காய்கறிகளை அறுவடை செய்வதில் சிரமம் ஏற்பட்டு உள்ளது. இதனால் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வரும் காய்கறிகளின் வரத்து குறைந்து உள்ளதால் விலை உயர்வு ஏற்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## தஞ்சையில் பலத்த மழை கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது



தஞ்சையில் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால் கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது.

கோடை காலம்

தஞ்சை மாவட்டத்தில் கோடைகாலம் தொடங்கியது முதல் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வருகிறது. கோடை வெயிலின் உச்சகட்டமான அக்னி நட்சத்திரம் காலக்கட்டத்திலும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்த நிலையில் அக்னி நட்சத்திர காலக்கட்டத்தில் 4 நாட்கள் தொடர்ந்து மழை பெய்தது. அதன் பின்னர் மழை இன்றி மீண்டும் வெயிலின் தாக்கம் அதிகரிக்க தொடங்கியது. தஞ்சை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் 100 டிகிரிக்கும் அதிகமாக கொளுத்தியது. இந்த வெயில் கொடுமையினால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். பகலில் தான் வெயிலின் கொடுமை அதிகமாக

இருந்தது என்றால் இரவிலும் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. மின்விசிறியில் இருந்தும் அனல் காற்று தான் வீசியது.

பலத்த மழை

இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தாலும் இரவு நேரத்தில் மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ஆனால் மழை பெய்யவில்லை. இந்த நிலையில் நேற்று காலை முதலே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. மதியத்துக்குப்பின்னர் வெயில் குறைந்து வானம் மேகமூட்டத்துடன் காட்சி அளித்தது.

மாலை 5 மணிக்கு மழை பெய்யத்தொடங்கியது. பின்னர் பலத்த மழை கொட்டியது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. திடீரென மழை பெய்ததால் வீட்டை விட்டு வெளியே சென்றவர்கள் நனைந்தபடியே வீடு திரும்பினர். சுமார் அரைமணி நேரத்திற்கு மழை பெய்தது. பின்னர் சிறிது நேரம் விட்டு மீண்டும் மழை பெய்தது. இதே போல் தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று பரவலாக மழை பெய்தது. இதனால் கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது.

விவசாயிகள் மகிழ்ச்சி

தஞ்சை மாவட்டத்தில் தற்போது விவசாயிகள் குறுவை சாகுபடி பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். பம்புசெட் மோட்டார் உள்ள இடங்களில் தற்போது நடவு பணிகளும், ஒரு சில இடங்களில் நாற்றாங்கல் தயாரிக்கும் பணிகளிலும் விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் மழை பெய்தது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## தஞ்சையில் இருந்து திருவண்ணாமலைக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது

தஞ்சையில் இருந்து திருவண்ணாமலைக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

<u>நெற்களஞ்சியம்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல், தமிழக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தில் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>1,200 டன் புழுங்கல் அரிசி</u>

அதன்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளில் இருந்து ஏற்றிவரப்பட்ட 1,200 டன் புழுங்கல் அரிசி மூட்டைகள் தஞ்சை ரெயில் நிலையத்துக்கு லாரிகள் மூலம் நேற்று கொண்டுவரப்பட்டன. பின்னர் அந்த அரிசி மூட்டைகள் தஞ்சையில் இருந்து சரக்கு ரெயில் மூலம் திருவண்ணாமலைக்கு 21 ரெயில் வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

# 38 ஆயிரம் ஏக்கரில் நடவு பணி மேற்கொள்ள இலக்கு கலெக்டர் தகவல்



கூட்டத்தில் கலெக்டர் மதிவாணன் பேசியபோது எடுத்தபடம்.

திருவாரூர் மாவட்டத்தில் 38 ஆயிரம் ஏக்கரில் நடவு பணி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் கூறினார்.

விழிப்புணர்வு கூட்டம்

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

முதல்-அமைச்சர் ஜெயலலிதா, டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடியை ஊக்குவிக்கவும், மண் வளத்தை பெருக்கவும் குறுவை தொகுப்பு திட்டத்துக்கு ரூ.54 கோடியே 65 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ், விவசாயத்துக்கு 12

மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்பட உள்ளது. குறுவை நெல் நடவு பணிகளை உரிய காலத்தில் மேற்கொள்ள எந்திரமுறையில் நெல் நடவுக்கான செலவீனம் 100 சதவீத மானியமாக ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வீதம் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். குறுவை சாகுபடியின் மகசூலை உயர்த்தும் வகையில் நெல் நுண்ணூட்ட கலவை மற்றும் சிங்சல்பேட் ஆகியவை 100 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

100 சதவீதம் மானியம்

நிலத்தடி நீர் சிக்கனத்தை ஊக்கப்படுத்த குழாய்கள் 100 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். காவிரி பகுதியில் குறுகிய கால பயறுவகை விதைகள் 100 சதவீதம் மானியத்திலும், உழவு மானியமாக ஏக்கருக்கு ரூ.500-ம் வழங்கப்படும்.

திருவாரூர் மாவட்டத்தில் 38 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நடவு பணி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. நெல் நுண்ணூட்டச்சத்து 12 ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கும், சிங்சல்பேட் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கும் விலையில்லாமல் வழங்க இலக்குநிர்ணயிக்கப்பட்டுள்ளது. பைப்புகள் 250 யூனிட் வழங்க ஒதுக்கீடு பெறப்பட்டு உள்ளது.

காவிரி பகுதியில் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பில் உழவு செய்து பயறு வகை பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளவும் இலக்குகள் பெறப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பு ரூ.20 கோடியே 824 லட்சமாகும். இந்த ஆண்டில் 71 ஆயிரத்து 750 ஏக்கர் பரப்பில் குறுவை சாகுபடி செய்யவும், உற்பத்தித்திறனை உயர்த்தவும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி மோகன்ராஜ், வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், கூட்டுறவு சங்க மண்டல இணை பதிவாளர் ராஜேந்திரபிரசாத், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் துரைசாமி, வேளாண்மை அறிவியல் நிலையம் பேராசிரியர் பாஸ்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.